6) செ.கு. எண்: 227.

நாள் : 03/12/2011.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 3.12.2011

விழுப்புரம் மாவட்டம், கோலியனூர் மதுரா அனிச்சம்பாளையம் கிராமத்தில் வசித்து வரும் திரு. வெங்கடேசன் என்பவரது 1–½ வயது குழந்தை சந்தியா 1.12.2011 அன்று வீட்டு முன்பு விளையாடிக் கொண்டிருந்த போது, அரசு பேருந்து மோதியதில், அக்குழந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தாள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த குழந்தை சந்தியாவின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த குழந்தை சந்தியாவின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

*வெளியீடு, இயக்குநர்,*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*